## ஆகஸ்ட் - 6

**"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்."**

**- யாக் 4 : 7.**

நமக்கு சோதனைகள் ஏற்படும்போது அவைகளை விலக்கித் தள்ளிவிடுவதில் உறுதியாயிருந்தோமானால், அப்படிச் செய்வது சோதிக்கப்பட்ட அந்த சமயத்துக்கு மாத்திரமல்லாமல், தொடரும் சோதனைகளுக்கு எதிராக நம்முடைய குணத்தின் வலிமையை அதிகப்படுத்துகிறது. மேலும், அது சிறிதளவு நம்முடைய எதிராளியை தடுமாறப்பண்ணுகிறது. அப்பொழுது அவன் நம்முடைய உறுதியான நிலையைக் கவனித்து, திடநம்பிக்கையுள்ள, உறுதியான குணமுடைய ஆட்களோடு விஷயத்தை விவாதிப்பது பிரயோஜனமற்றது என்று நன்றாக அறிந்திருக்கிறான். அப்படியிருக்கையில், விஷயத்தைப்பற்றி விவாதிக்க ஆரம்பித்தோமானால், நிச்சயமாகவே எதிராளியின் பக்கமாக மேலும் காரணங்களும் விவாதங்களும் கூறப்பட்டு விவாதத்தில் நாம் தோற்றுப்போவோம் என்ற அபாயமும் ஏற்பட்டு விடும். ஏனென்றால், "அப்போஸ்தலன் சொல்லுகிற பிரகாரமாக, பிசாசானவன் தந்திரமுள்ள எதிராளி. "அவனுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே." கர்த்தருடைய ஆவிக்கும் உடனடியாகவும் உறுதியாகவும் கீழ்ப்படிதலே, சகோதரர் எவருக்குமுள்ள ஒரே பத்திரமான மார்க்கமாயிருக்கிறது. **- Z '00, 30(R 2565)**

சாத்தான் தனக்கு தற்காப்புக்காகவும் மட்டுமன்றி தாக்குதலுக்காகவும் நமக்கு எதிராகக் கிரியை நடப்பிக்கிறான். அவனுடைய தாக்குதல் தந்திரமுள்ளதாகவும், திடீரென்றும், கடுமையானதாகவும், விடாப்பிடியாகவும் இருக்கிறது. அவனைப் பலத்துடன் துரத்துவது நமக்குத் தகுதியாயிருக்கிறது. விழிப்புள்ளவர்களாயிருப்பதினாலும், ஜெபத்தினாலும், நம்முடைய எத்தனகளிலுள்ள விசுவாசத்தினாலும், ஜெபத்திற்காகவுள்ள நம்பிக்கையினாலும், அவனைத் தோற்கடிக்க வேண்டுமென்ற ஆசையாலும், ஜெயங்கொள்ள எடுக்கும் உறுதியான தீர்மானத்தாலும், அவனுக்கு எதிராக எடுக்கும் முயற்சியாலும், தீமையிலிருந்து நம்முடைய பற்றுதல்களை பிரிப்பதினாலும், தீமையைத் தவிர்ப்பதினாலும், தீமையிலிருந்து கவனத்தைத் திருப்புவதினாலும், தீமையை அதன் எதிரான நன்மையினால் பெயர்த்துவைப்பதினாலும், எதிரான நன்மையல்லாத மற்றதினால் தீமையைத் தடுப்பதினாலும், சாத்தானுடைய தாக்குதல்களுக்கு ஊடுருவக்கூடாத ஒரு இருதயத்தையும் மனதையும் அவனுக்கு முன் நிறுத்துவதினாலும், அவன் பின்னுக்குத் துரத்தப்படுவான். இப்படிப்பட்ட எதிர்ப்பில் பிடிவாதமாக இருந்தோமானால், சாத்தான் தோற்கடிக்கப்படுவான். நம்மை விட்டு ஓடிப்போவான். **- P '36, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**1பேது 5:8,9; எபே 4:27; 6:10-13; மத் 4:1-11; 1நாளா 21:1; யோபு 1:6-12; 2:3-7; சகரி 3:1,2; மத் 13:19,38,39. லூக் 22:31; யோவா 8:38,41,44; 12:31; 13:2,27; ரோம 16:20; 2கொரி 2:11; 4:4; 11:3,14,15; 1யோவா 3:8,10,12; 5:18.**

**கோபுர வாசிப்பு : Z '16, 147 (R 5896)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் சாத்தானை எதிர்த்து நின்றேனா? எப்படி? எது உதவியாயிருந்தது? எது தடையாயிருந்தது? பலன்கள் எவை?**